இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 31-03-2025

# காந்தி தேசமே இது நியாயமில்லையே?

வெளியுலகத்துக்கு இந்தியாவின் பெயர் ‘காந்தி தேசம்’. ஆனால் இங்கு காந்தி பெயரிலான திட்டத்துக்கே முறையாக நிதி வழங்குவது இல்லை!

காந்தி பெயரிலான 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 4,034 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசு தரவில்லை. இதனைக் கண்டித்து தமிழ்நாடு முழுக்க மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று தி.மு.க. பொதுச் செயலாளர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் அறிவித்து இருந்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்று இருக்கிறது. தமிழ்நாடுமுழுவதும்1,170இடங்களில்இந்தஆர்ப்பாட்டமானது நடைபெற்றுள்ளது. பாதிக்கப்படும் ஏழை எளிய கிராமப் புற ஆண்கள் - பெண்கள் அதிகம் இதில் இடம் பெற்று இருக்கிறார்கள். இந்த மக்களின் உழைப்பைத்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு சுரண்டிக் கொண்டிருக்கிறது. ஒரே நேரத்தில் இத்தனை இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருப்பது ஒன்றிய அரசின் செயல்பாடுகளுக்கு எதிரான மாபெரும் எழுச்சியைக் காட்டுகிறது.

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கான எந்தத் திட்டமும் இல்லை என்பதைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நாடு முழுவதும் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அடுத்து ஒன்றிய அளவில் ஆயிரம் இடங்களுக்கு மேல் இந்த கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் எந்தளவுக்கு வஞ்சிக்கிறது என்பதை மக்கள் மன்றம் அறிந்து வருகிறது.

தி.மு.க. ஆதரவுடன் அமைந்த பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வழங்கிய மகத்தான திட்டம் இது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டமானது 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. கோடிக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு 100 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வேலை கிடைத்தது. ஏப்ரல் 2008 இல், இந்தத் திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (MGNREGA) என பெயர் மாற்றப்பட்டது. இன்று வரை கோடிக்கணக்கானவர்கள் வாழ்வாதாரத்தை உறுதி செய்து வருகிறது.

கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒரு நிதியாண்டில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பில் அதிகபட்சம் நூறு நாட்கள் உடலுழைப்பை வழங்கும் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். 2014 ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் இந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவது இல்லை. அதற்கான நிதியை தாமதமாகவே வழங்குகிறார்கள்.

100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்காமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஜனவரி 13ஆம் நாள் பிரதமருக்கு கடிதம் எழுதினார் முதலமைச்சர். நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனைச் சந்தித்து வலியுறுத்தினார். தி.மு.க. உறுப்பினர்கள் மக்களவையிலும் மாநிலங்களவையிலும் இதனை எழுப்பினார்கள். ஆனாலும் பணம் வழங்கவில்லை பா.ஜ.க. அரசு.

**“ஒன்றிய அரசு வழங்காவிட்டாலும் 100 நாள் வேலைத்திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்புக்குரிய நிதியின் மூலம் ஊதியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. எனினும், ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பே இதில் முதன்மையானது என்பதால் உழைக்கும் ஏழை எளிய மக்களுக்கு முழுமையான அளவில் ஊதியம் வழங்கிட இயலவில்லை. தமிழ்நாட்டைப் போலவே கேரளா, மேற்கு வங்கம் போன்ற பா.ஜ.க ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கும் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை கிடைக்கவில்லை என்ற முறையீடுகள் வைக்கப்பட்டுள்ளன”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்குரிய நிலுவைத் தொகையான 4,034 கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனே விடுவிக்க வேண்டும் என்றும், 5 மாதங்களாக இந்தத் தொகை விடுவிக்கப்படாமல் இருப்பதால் கிராமப்புற ஏழைத் தொழிலாளர்கள், குறிப்பாக பெண் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

ரூ.4,034 கோடி நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்று சொன்னால், “உத்தர பிரதேசத்தைவிட தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி விடுவிக்கப்பட்டிருக்கிறது” என்று ‘தினத்தந்தி’யில் போட வைக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால் ரூ. 4,034 கோடியை விடுவியுங்கள் என்று நாம் ஏன் கேட்கப் போகிறோம்?

2021 ஆம் ஆண்டும் இதே போல் தான் நடந்தது. 2021 நவம்பர் மாதம், பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். உடனடியாக நிலுவைத் தொகையினை மாநிலத்திற்கு விடுவிக்கக் கோரி அதில் சொல்லி இருந்தார் முதலமைச்சர்.

**“2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்ட ரூ.3524.69 கோடியில் மொத்தத் தொகையும் 15.09.2021 வரை தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைத்து முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதன்பிறகு இத்திட்டத்திற்கு நிதி ஏதும் விடுவிக்காத காரணத் தால், 1.11.2021 அன்றுள்ளவாறு 1178.12 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியம் வழங்கப்படாமல், நிலுவையாக உள்ளது”** என்பதை அப்போது சொல்லி இருந்தார் முதலமைச்சர். உடனே ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், ‘அனைத்து நிதியையும் தந்துவிட்டோம். நிலுவை ஏதும் இல்லை’ என்று சொன்னார்.

சில நாட்களில் தான், 1336 கோடி ரூபாயை ஒன்றிய அரசு விடுவித்தது. எல்.முருகன் வாய்க்கு வந்ததைச் சொன்னார். அதைப் போலவே இப்போதும், ‘உ.பி.யை விட அதிகம் கொடுக்கிறோம்’ என்று பரப்புகிறார்கள். இது போன்ற பொய்ச் செய்திகளை பரப்புவதை விடுத்து, நிதியை விடுவிப்பதில் ஒன்றிய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

**“உங்களுக்கு வேண்டப்பட்ட கார்ப்பரேட்டுகள் என்றால் பல லட்சம் கோடி ரூபாய் கடனைக் கூட ஒரே கையெழுத்தில் தள்ளுபடி செய்கிறீர்களே? வேகாத வெயிலில் உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைத்த ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க மட்டும் பணமில்லையா? மனமில்லையா?” என்று முதலமைச்சர் எழுப்பியுள்ள கேள்வியைத்தான் தமிழ்நாடு கேட்கிறது.**




வேலூர் மாவட்டம் காட்பாடியில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு 5072 இஸ்லாமிய மக்களுக்கு ரமலான் தொகுப்புகளை கழக பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க கட்டண உயர்வா?

# இது ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட சுரண்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, மார்ச் 31 -**

**ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க கட்டணம் உயர்த்தப்பட்டது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் ‘இது டிஜிட்டல் மயமாக்கம் அல்ல; இது நிறுவன மயமாக்கப்பட்ட சுரண்டல்’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

ஏ.டி.எம்.மில் பணம் எடுக்க கட்டணம் உயர்த்தப்பட்டது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

அனைவரும் வங்கியில் கணக்கு தொடங்குங்கள் என்று ஒன்றிய அரசு சொன்னது. பிறகு பணமதிப்பிழப்பு நடவடிக்கை கொண்டுவந்து, டிஜிட்டல் இந்தியா என்றார்கள்.

அடுத்து என்ன? டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் பிடித்தார்கள். குறைவான இருப்புத் தொகை என்று சொல்லி அபராதம் விதித்தார்கள். தற்போது, அனுமதிக்கப்பட்ட மாதாந்திர அளவைத் தாண்டி ஏ.டி.எம்.இல் பணம் எடுக்கும் ஒவ்வொரு முறையும் 23 ரூபாய் வரை கட்டணம் பிடிக்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

இதனால் என்ன ஆகும்? தேவைக்கு மீறி, ஒரேயடியாக மக்கள் தங்கள் பணத்தை எடுக்க வேண்டி வரும். குறிப்பாகஏழைகளுக்கும்வங்கிச் சேவைகள் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தையே இது சிதைத்து விடும்.

ஏற்கனவே நிதி விடுவிக்கப்படாமல் தவிக்கும் நூறு நாள் வேலைத் திட்டப் பயனாளிகள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறும் ஏழைகள் ஆகியோர்தான் இதனால் இருப்பதிலேயே அதிக பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

இது டிஜிட்டல் மயமாக்கம் அல்ல, இது நிறுவனமயமாக்கப்பட்ட சுரண்டல். ஏழைகள் ஏ.டி.எம். அட்டையைத் தேய்க்க, பணக்காரர்கள் திளைக்கிறார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### வேலூர் மாவட்டம்

# காட்பாடியில் 5072 இஸ்லாமிய பெரு மக்களுக்கு ரமலான் தொகுப்பு!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் வழங்கினார்!

*வேலூர், மார்ச் 31-*

வேலூர் மாவட்டம் காட்பாடியில் ரமலான் பண்டிகையை முன்னிட்டு 5072 இஸ்லாமிய மக்களுக்கு ரமலான் தொகுப்புகளை கழக பொதுச் செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் வழங்கினார்.

நாடுமுழுவதும் இஸ்லாமிய மக்கள் ரம்ஜான் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் காட்பாடி சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் காட்பாடி சித்தூர் பஸ் நிறுத்தத்தில் காட்பாடி தொகுதியை சேர்ந்த 5072ஏழை இஸ்லாமிய குடும்பங்களுக்கு 43 லட்சம் மதிப்பீட்டில் பிரியாணி ,அரிசி நெய் ,சமையல் எண்ணெய் உட்பட மசாலா பொருட்கள் அடங்கிய ரமலான் தொகுப்பும், ரூபாய் 200 ம் வழங்கப்பட்டது.

இவற்றை கழக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன் பேசினார் . அவர் பேசியதாவது:

தி.மு.க. என்றுமே இஸ்லாமியர்களுக்கு பக்கபலமாக இருந்து வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டலில் காட்பாடியை சேர்ந்த இஸ்லாமிய ஏழை குடும்பங்களுக்கு ரமலான் தொகுப்பை எம்.பி. கதிர்ஆனந்த்,காட்பாடி சட்டமன்ற தொகுதி திமுக நிர்வாகிகளுடன் இணைந்து வழங்கி உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் ஜி.வன்னிய ராஜா துணை மேயர் எம். சுனில்குமார் பி.பரமசிவம் முருகப்பெருமாள் மண்டல குழு தலைவர் புஷ்பலதா,

ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சரவணன் தணிகாசலம் முருகன்,சி. ரவி கே.கருணாகரன் வேலூர் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் முரளி பாஸ்கர், மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கமல்ராஜ் திருவலம் பேரூர் செயலாளர் நேரு உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட இடங்களில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி.கே.கலைவாணன்-ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

*திருவாரூர், மார்ச் 31 -*

தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு வஞ்சித்து ,திராவிட நாயகர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் உலக அரங்கில் பாராட்டப்பட்டு வரும் தமிழ் நாட்டின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல் , நியாமாக தரப்படவேண்டிய நிதியை வேண்டுமன்றே நிறுத்தி வைத்திருக்கும் ஒன்றிய பா.ஜா.க. அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்து தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களின்படி , திருவாரூர் மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தொழில்,முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ ,தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், இளைஞர் அணி துணை செயலாளர், தாட்கோ தலைவர் நா. இளையராஜா,கழக சட்டத்திருத்தக்குழுஉறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட முன்னாள் ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகளுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

ஒன்றிய கழக செயலாளர்கள் வீ.அன்பரசன், எஸ். ஜோதிராமன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், ஆர்.பாலச்சந்திரன், கோ.தெட்சிணாமூர்த்தி, இரா.மனோகரன், பால.ஞானவேல், சேகர் கலியபெருமாள்,புலிவலம் ஏ.தேவா,ப.பிரகாஷ், ஐ.வி.குமரேசன், டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கேவிகே ஆனந்த் ப.பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் மாவட்ட துணை செயலளர்கள் எம். எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கார், மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ஞானசேகரன் , ப.ஆடலரசு, கே.செல்வம்.

நகர செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா. கணேசன், ஆர்.ராஜசேகரன், பா.சிவநேசன், ஏ.கே. டி.சேரன், எஸ்.வி.பக்கிரிசாமி, நன்னிலம் பக்கிரிசாமி, பேரூர் செயலாளர்கள் பூண்டி.கே.கலைவேந்தன், பேரளம் தியாகு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் , மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு, கிளைக்கழக நிர்வாகிகளுடன், கழக தோழர்களும், நூறுநாள் வேளையில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான பெண்களும் பெருந்திரளாக பங்கேற்று ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி , மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் முகையூர் ஊராட்சி ஒன்றியம் அருணாபுரம் கிராமத்தில் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் அ.சா.ஏ.பிரபு, ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன் உள்ளிட்ட ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய குழு உறுப்பினர் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.